1975 அக்டோபர் 25]

(முற்பகல் 9-30)

* 52 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கடம்பூரில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இந்நிலையத்திற்கு மருந்தகக் கட்டடம் பொதுப்பணித்துறையினரால் தற்போது கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கட்டட வேலை கூடிய விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குளித்தலை, கரூர் வட்டங்களில் குட்டை அமைப்புத் திட்டங்கள்

* 53வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 முதல் 1974 வரை குளித்தலை, கரூர் ஆகிய வட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குட்டை அமைப்புத் திட்டங்களின் விவரங்கள் யாவை ?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1972 முதல் 1974 வரை குளித்தலை வட்டத்தில் 13 குட்டைத் திட்டங்களும், கரூர் வட்டத்தில் 15 குட்டைத் திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆக மொத்தம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட திட்டங்கள் 28 ஆகும்.

(இ) அவைகளில் குளித்தலை வட்டத்தில் 6 குட்டைத் திட்டங்களும், கரூர் வட்டத்தில் 4 குட்டைத் திட்டங்களும் நிறை வேற்றப்பட்டன. ஆக மொத்தம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 10 ஆகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, குளித்தலை வட்டத்தில் மஞ்சாநாயக்கன்பட்டி என்ற கிராமத்தில் கருவேலங் குளத்தைப் புதுப்பிப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டதே, அது நிறைவேற்றப்பட்டுவிட்டதா? இன்னும் நிறைவேற்றப்படவில்லை யென்றால் இனிமேலாவது அதை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : 1975 ஆம் ஆண்டிலிருந்து குட்டைகள் கட்டுவது எல்லாம் பான் செய்யப்பட்டிருக்கிறதா? அதன் காரணமாக எல்லா மாவட்டங்களிலும் திட்டங்கள் பல நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன, அதனால் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அது எப்போது ரிமூவ் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படியொரு திட்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கோவை மாவட்டத்திலே இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு நல்ல பலனைத் தந்திருப்பதாக அங்கிருந்து வந்த விவசாயிகள் என்னிடத்திலே விவாதித்தபோது தெரிவித்து இருக்கிறார்கள், பாராட்டியிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : இந்த பாண்ட்ஸ் ஸ்கீம் வட ஆர்க்காடு மாவட்டத்தில்—அந்த மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம், ஆற்றுப்பாசனமே இல்லாத மாவட்டம்—எங்கனவே கோயம் புத்தூரில் ஆரம்பித்தபோதே அப்போது இருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கு அது கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள் . . .

MR. DEPUTY SPEAKER : The question relates to Kulithali and Karur.

திரு. நா. வீராசாமி : அவர்கள் அஷ்யூரன்ஸ் கொடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த முறையிலே அதை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்போது இருந்த பொதுப்பணித் துறை அமைச்சரின் உத்திரவாதத்தை நான் பூர்த்தி செய்யமுடியாததற்கு வருந்துகிறேன்.

1975 அக்டோபர் 25]

திரு. கே. என். குமாரசாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் பல எஸ்டிமேட்கள் நிறுத்தப் பட்டிருக்கின்றன, சாங்ஷன் செய்யப்படாமல் நிறுத்திவைக்கப் பட்டிருக்கின்றன, அந்த எஸ்டிமேட்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? காரணம் பணம் இல்லையென்று சொல்கிறார்கள், ஆகவே அவற்றையெல்லாம் விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிறுத்திவைக்கப்பட்டதன் காரணத்தை கனம் அங்கத்தினர் அவர்களே குறிப்பிட்டிருக் கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்திப்: ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதியை இந்த அரசு பூர்த்தி செய்யாது என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டம் மட்டுமல்ல, தமிழகத்தில் பெரும்பாலும் கேணிகளும், ஏரிகளும், இத்தகைய குட்டைகளும் தான் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுகின்றன. தண்ணீர் அளிக்கிற சப்ளை சேனல்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள், இதன் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான குட்டைகள் தண்ணீர் இல்லாமல் வாடிக்கொண்டிருக்கின்றன. அங்கங்கே செய்திருக்கிற ஆக்கிரமிப்புகளைத் தவிர்ப்பதற்கு இந்த அவசர நிலை நேரத்திலாவது துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது புதிய குட்டைகளை அமைப்பதைப்பற்றிய கேள்வி. ஏரிகளை, குளங்களை, குட்டைகளை ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் யார் ஆக்கிரமிப்புச் செய்திருந் தாலும் அகற்றப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக் கிறது.

புலியூர் வாய்க்காலைப் புதுப்பித்தல்

*54 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் உள்ள புலியூர் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?